**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.23/2020 தேதி- 16.10.2025
(P.W.2) - ராஜு

<u>குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் வாதி எனக்கு நன்றாக தெரிந்த நபர் என்றால் சரிதான். மேற்சொன்ன வாதி தான் என்னை சாட்சி அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு பட்டிகை சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.6/3 ஆகும். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதியோ, வாதியின் அப்பாவோ வரைபட அனுமதி பெற்று வீட்டைக் கட்டினார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்னவாறு எந்த வரைபட அனுமதியும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களில் பட்டிகை சொத்து அரசு ுபுறம்போக்கு நிலம் என்று தான் உள்ளத என்றால் அதுபற்றி தெரியாது ஆவணங்களை பார்த்ததில்லை. வாதியின் அப்பா வழக்கு பட்டிகை சொத்தான அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்ததால் அரசாங்காதால் B-Memo வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். பட்டிகை சொத்தின் மேற்கில் அரசால் கட்டப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரம் உள்ளது என்றால் சரிதான்.

2. B-Memo அடிப்படையில் வாதியோ அவரது வாரிசுகளோ அரசு புறம்போக்கு நிலத்தில் உரிமைக்கோர முடியாது என்றால் சரியல்ல. வாதியின் குடும்பத்தாருக்கு தனியாக குடும்ப கல்லறை தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. வாதியே தன்னுடைய சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் அவரின் தாய், தந்தை மற்றும் சகோதரியின் பிரேதத்தை உரிய அரசாங்க அமைப்பிடம் அனுமதி பெறாமல் அடக்கம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் சகோதரரான 3-ஆம் பிரதிவாதி விஜயனுக்கு பெரியார் சமத்துவ புரத்தில் அரசால் வீடு வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அரசு புறம்போக்கு நிலத்தை அரசுக்கு தேவைப்படும் போது ஆக்கிரமிப்புகளை மற்றும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றிவிட்டி அந்த நிலத்தை கையகப்படுத்த அரசுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்ட நபர் என்பதல் நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியோ, வாதியின் பெற்றோர்களும் நீண்ட நெடுங்காலமாக வழக்கு பட்டிகை

சொத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்று நான் கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார் என்பதால் எந்தவித உரிமையும் வழக்கு பட்டிகை சொத்தில் கோர இயலாது என்றாலும் இந்த வழக்கின் 1-ஆம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.